**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 19 June 2020

# உலக தொற்றுநோய் அமைப்புக்கு தலைவராகிறார் பால் தம்பையா



சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகப் பேராசிரியரும் தொற்று நோய்த் துறை வல்லுநருமான பால் தம்பையா (படம்), 2022ல் அமெரிக்காவின் மேசசூசட்ஸ் நகரில் செயல்படும் அனைத் துலக தொற்றுநோய் சங்கத்தின் தலைவராக பொறுப்பேற்கவிருக் கிறார்.

பேராசிரியர் தம்பையா இப் போது அந்தச் சங்கத்தின் தேர்ந் தெடுக்கப்பட்ட தலைவராக நியம னம் பெற்று இருக்கிறார். சங் கத்தின் தலைவராக பொறுப் பேற்கும் வரை, அதன் இப்போ தைய தலைவரான பேராசிரியர் அலிசன் ஹோல்ஸ்க்கு துணை யாக இருந்து பேராசிரியர் தம்பையா உதவி வருவார்.

அனைத்துலக தொற்று நோய்ச் சங்கம் 1986ல் அமைக் கப்பட்டது. 155க்கும் அதிகமான நாடுகளைச் சேர்ந்த 90,000 பேருக்கும் மேற்பட்ட உறுப்பி னர்களைக் கொண்ட அந்தச் சங்கத்தின் தலைமை பொறுப் பேற்கும் முதல் சிங்கப்பூரர் இவரே என்பது குறிப்பிடத்தக் கது.

பேராசிரியர் தம்பையா, ஆசியப் பசிபிக் மருந்தக நுண்ணு யிரியல் மற்றும் தொற்றுநோய்க் கழகத்தின் தலைவராவார்.

சிங்கப்பூர் ஜனநாயகக் கட்சியின் தலைவராகவும் இவர் இருக்கிறார்.

தம்முடைய நியமனம் பற்றி கருத்து தெரிவித்த பேராசிரியர் தம்பையா, சிங்கப்பூரைச் சேர்ந்த கல்வியாளர்களும் மருந்தகத் துறை யினரும் பொதுச் சுகாதாரப் பட்டத் தொழிலர்களும் இத்தகைய சங் கத்தைச் சேர்ந்த அமைப்புகளுக்கு உதவி செய்து, அனைவருக்கும் இந்த உலகை சுகாதாரமிக்க ஒன் றாக ஆக்க பெரும் தொண்டாற்ற முடியும் எனக் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.